6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

1987 நவம்பர் 13]

(முற்பகல் 11–30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை தொடர்ந்து கொண்டு வருவதால் நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். இந்தச் சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை தொடக்கத்திலேயே நான எதிர்க்கிறேன். காரணம்....... (மணியடிக்கப்பெற்றது.(

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். இந்த தனி அதிகாரிகளுடைய பதவியின் காலத்தை தொடர்ந்து நீட்டித்துக்கொண்டு வருவதை ஒரு கொள்கையாக இந்த அரசு கொண்டிருக்கிறது. இந்த கொள்கையை அரசு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.